விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 129 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 14 வியாழக்கிழமை (27.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## சர்வதேச நாணய நிதியம் தமிழின அழிப்புக்கு உதவுகிறதா?

### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

இந்த நாட்டிலே தமிழர் பகுதிகளை கபளீகரம் செய்து, தமிழர்களை இலங்கையிலே இல்லாமல் செய்வதில் இந்த நாடு மிக முக்கியமான பாத்திரத்தை கொண்டுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியம் இந்த விடயத்திற்கு உடந்தையாக இருக்கப் போகின்றதா என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீ 15

## கச்சதீவில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றம்

(கொழும்பு)

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுவிட்டதாக நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளதாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

ஆயர் இல்லம் சார்பில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்விடயத்தை கடற்படையின் 15

## வண்ணை வைத்தீஸ்வரனுக்கு நேற்று மகா கும்பாபிஷேகம்




(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

## ஐ.எம்.எவ் உடன்படிக்கையை ஆதரிப்பதே ஒரே தீர்வாகும்

### பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

நெருக்கடிக்கு ஒரே தீர்வு சர்வதேச நாணய நிதியமாக இருந்தால், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளிப்பதைத் தவிர வேறு வழியில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வெடுக்குநாறி மலையில்

## பூஜை வழிபாடுகள் மீண்டும் ஆரம்பம்

(வவுனியா)

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட காலத்திற்கு பிறகு பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி உள்ளது.

இந்த ஆலயத்தில் வழிபாடு செய்வதற்கு இடையூறாக தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு 15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் **பரீட்சை வினாத்தாள்**

உள்ளே ☛

## ‘என்னை சிறையில் அடைக்க அல்லது தூக்கிலிட முனைப்பு’

### மைத்திரிபால சிறிசேன கவலை



(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஏற்கெனவே பலர் கைது செய்யப்பட்டுள்ள போதும் தன்னையும் குறி வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 15

### யாழைச் சேர்ந்த சகோதரர்கள்

## மல்லாவி வவுனிக்குளத்தில் மூழ்கி உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ஒன்று 15



## கோட்டா தவறானவர் ரணிலே சிறந்தவர்

### பல்டி அடித்தார் வீரசேகர

(கொழும்பு)

நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை, அதுவே பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் சட்டம், 15

## மோ.சைக்கிள் விபத்து

### பொலிஸ் உத்தியோகத்தர் பலி

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதி எருவன் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் 15



அன்பு வாசகர்களே!
**உங்கள் வலம்புரியில் சிவல்புரி சிங்காரம்** எழுதும்
**வியாழ மாற்ற பலன்கள்**
உள்ளே
*வாசிக்கத் தவறாதீர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
04 - 07 - 1950

மறைவு
26 - 04 - 2023

## திருமதி நடராஜா மனோகரி

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நடராஜா மனோகரி அவர்கள் நேற்று (26.04.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - இராசம்மாவின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலன் - சீதேவியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான பவானந்தம், நித்தியானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் உதயகுமார், வையந்திமாலா, பிறேமகுமார், வசந்தகுமார், ராஜ்குமார், ரஜினகுமார், லலித்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜீவசுதா, சந்திரசேகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டிசெந்தியா, சுவஸ்திகா, பிருசாளினி, டிலாஜினி, ஹஜினகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சுபத்திரை, பாலகிருஸ்ணன், இரத்தினம், பாலசிங்கம், பாலேந்திரன் மற்றும் பரமநாதன், செல்வராணி, காலஞ்சென்ற தவமணி தேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.04.2023) இன்று வியாழக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(15380)

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
06 - 04 - 1939

உதிர்வு
28 - 04 - 2012

## அமரர் திருமதி சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு

திதி: சப்தமி 27.04.2023

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழவைத்த தெய்வமே
ஆண்டுகள் பதினொன்று கடந்தாலும் உன் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"மாதர் வளவு"
மல்லி ஓடை ஒழுங்கை
வல்வெட்டித்துறை.

(15375)

நினைவுகளுடன்:-
கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# நாவலர் மண்டப விவகாரம்

## இடைக்கால தடையை மேலும் நீடித்த மன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ் மாநகர சபையை வடமாகாண ஆளுநர் வெளியேற பணித்தமைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் விதித்த இடைக்கால கட்டளை மே மாதம் 29ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே நீதிமன்றம் இடைக்கால கட்டளையை நீடித்து உத்தரவிட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் யாழ் மாநகர சபையினை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேற பணித்ததுடன் அதனை புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிராக யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆஜராகியிருந்தபோதே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் ஏப்ரல் 4ம் திகதி இந்த இடைக்காலக் கட்டளையை பிறப்பித்து. குறித்த வழக்கு நேற்று(26)க்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச சட்டவாதி தரப்பில் இடைக்கால கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி இடைக்கால கட்டள்ளையை நீடித்து வழக்கை மே 29ம் திகதி வரை ஒத்திவைத்தார். (4-7-9-33)

## J/Pandateruppu Girls' High School
## பழைய மாணவர் சங்கப்
## பொதுக்கூட்டம்

**இடம் :** பாடசாலை மண்டபம்
**காலம் : 06.05.2023** ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் **3.30** மணி
**தலைமை :** அதிபர் திருமதி செ.தேவராஜ்

மேற்படி கூட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர்கள்அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்

அதிபர்
யா/பண்டத்தரிப்பு பெண்கள்
உயர்தரப் பாடசாலை

(15378)

## முல்லை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சமாசம் வெற்றிடமாகவுள்ள 03 பதவிகளுக்கு 2023/04/27 - 2023/05/09 விண்ணப்பம் கோரப்படுகின்றது

**01. பதவி : எழுதுநர்**
**குறியீட்டிலக்கம் (302/14)**
**பதவி வெற்றிடம் (02)**

**சம்பள அளவுத்திட்டம் (சுற்றறிக்கை 2/2022)**
17900-155 X 10-165 X 10-21100
214800-1860 X 10 -1980 X 10 -253200

**தகைமைகள் (சு.நி 01/2021 இன் படி)**
அ. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்ட பதவியில் எழுதுனர்/காசாளர்/ கணணி பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்ட பதவியில் எழுதுனர்/காசாளர்/ கணணி பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப் பரீட்சை சித்தி/ க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது/சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடன் சித்தி.

**02. பதவி : காவலாளி**
**குறியீட்டிலக்கம் (315/16)**
**பதவி வெற்றிடம் (01)**
**சம்பள அளவுத்திட்டம் சுற்றறிக்கை (2/2022)**
**சம்பள அளவுத்திட்டம்**
16975-135 X 10-150 X 10 -19825
203700-1620 X 10 -1800 X 10-237900
**தகைமைகள்**
அ. கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தின்படி ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. 05ம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**03.பதவி : தொழிலாளி**
**குறியீட்டிலக்கம் (318/17)**
**பதவி வெற்றிடம் (01)**
**சம்பள அளவுத்திட்டம்**
16615-130 X 10 -145 X 1019265
198180-1560 X 10 -1740 X 10 -231180
**தகைமைகள்**
அ. 05ம் தரக்கல்வி சான்றிதழுடன் சிறந்த தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(C-6438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது

## இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளுமாறு பிரிட்டன் அரசாங்கத்திடம் உலகத்தமிழர்கள் வலியுறுத்து

(லண்டன்)

**இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அவ்வாறு ஏற்றுக் கொள்வதற்கு தீர்ப்பாயமொன்று அவசியமெனில், அதனை உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ நிறுவ வேண்டும் என்றும் உலகளாவிய ரீதியில் வாழும் 300 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் கையெழுத்துடன்கூடிய மனுவின் ஊடாக இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும் வழக்குத்தொடரலுக்கான சர்வதேச நிலையம் வலியுறுத்தியுள்ளது.**

அதன்படி அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச சமூகமும் ஊடகங்களும் அமைதி காத்துவருவது எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இனப்படுகொலை இடம்பெற்று 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அந்த உண்மையை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது குரலற்ற மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கோ சர்வதேச சமூகத்தினால் இதுவரையில் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

அதேபோன்று இலங்கைக்கு வெளியே பெரும்பான்மையான தமிழர்களின் "இல்லமாக"பிரிட்டன் திகழ்கின்ற போதிலும், இலங்கையில் தமிழினப்படு கொலை இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் பிரிட்டனால் முன்னெடுக்கப்படாமை கவலையளிக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு அமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து இணையனுசரணை வழங்கியதன் மூலம் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பிரிட்டன் மேற்கொண்ட முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

அதேவேளை தமிழ்மக்கள் இலங்கை அரசாங்கங்களினால் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் உடலியல் ரீதியானதும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியானதுமான இனப்படுகொலையை அனுபவித்தார்கள் அனுபவித்து வருகின்றார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விவகாரம் தொடர்பில் உடனடி நடவடிக்கை அவசியமென நாமனைவரும் கூட்டாக வலியுறுத்துகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதற்கு தீர்ப்பாயமொன்று அவசியமெனில், அதனை உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ நிறுவுங்கள் என்று அம்மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# உணவுப் பணவீக்கம் அதிகம் உள்ள நாடுகளில் இலங்கை இல்லை - உலக வங்கி தகவல்

(வோஷிங்டன்)

உணவுப்பொருட்களின்விலையேற்றம் அதிகம் உள்ள 10 உலக நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியால் தொகுக்கப்பட்ட பட்டியலில் பல வாரங்களாக தொடர்ந்து இடம்பெற்று வந்த இலங்கை, புதிய தரவில் நீக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது,

இதன் காரணமாக இலங்கை அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இல்லை என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

உலக வங்கி தனது சமீபத்திய மதிப்பீட்டில், லெபனான் நாட்டிலேயே அதிக உணவு விலை, பணவீக்கம் காணப்படுவதாக கூறியுள்ளது.

261 சதவீதத்துடன் லெபனான் தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் சிம்பாவே மற்றும் ஆர்ஜென்டினா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன. (நி)

# பாடப் புத்தகங்களை இம்மாத இறுதிக்குள் வழங்க நடவடிக்கை

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

(கொழும்பு)

தற்போது தட்டுப்பாடு நிலவும் மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை அடுத்த மாத இறுதிக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்கள் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இம்முறை 33 மில்லியன் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் அதற்காக 16,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (நி)

### சமுர்த்தி போன்ற நிவாரணத் திட்டங்களை

# அதிக வருமானமுள்ள 12 வீதமானோர் பெறுகின்றனர்-ஆய்வில் தகவல்

(கொழும்பு)

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று முன்னோக்கி செல்வதை யாராவது எதிர்ப்பார்களாயின் அவர்கள் இந்த நாட்டை மீட்பதற்காக மாற்றுவழியை முன் வைக்குமாறு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று, பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியமோ அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியோ அல்லது நலத்திட்டங்களை தடுக்கவில்லை என்றும் குறிப்பாக சமுர்த்தி போன்ற நிவாரண திட்டங்களை தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து வழங்குமாறே அவர்கள் குறிப்பிடுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



சமுர்த்தி பெறுகின்ற 12 சதவீதத்தினர் உரிய தகைமைகளை கொண்டிருக்கவில்லை என்பது தற்போதைய ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதிக வருமானம் பெறுகின்ற 12 சதவீதத்திற்கும் அதிக மானவர்களுக்கு அரசாங்கம் சமுர்த்தி கொடுப்பனவை கொடுப்பதாகவும் இந்த 12 சதவீத மானவர்களுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகளையே நிறுத்துமாறே சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுவதாக நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (நி)

# இலங்கையில் இந்திய ரூபாவை பயன்படுத்த முடியும்-மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய சுற்றுலாப் பயணிகள், உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவை பயன்படுத்த முடியும் என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட நாணயமாக இந்திய ரூபாய் மாற்றப்பட்டுள்ளமையானது இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக தீர்வுக்கு உதவும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# மாணவர்களுக்கான பாதணிகள், புத்தகப்பைகளின் விலைகளை குறைக்க உற்பத்தியாளர்கள் இணக்கம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் புத்தக பைகளின் விலைகள் குறைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதியின் பின்னர் பாடசாலை புத்தக பைகள் மற்றும் பாதணிகள் என்பனவற்றின் விலைகளை 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் அளவில் குறைப்பதற்கு இணக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவிடம் உற்பத்தியாளர்கள் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் புத்தக பைகள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் நேற்று முன்தினம் நிதி இராஜாங்க அமைச்சரை சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பினைத் தொடர்ந்து விலைகளை குறைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையில் உற்பத்திக்கான மூலப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நலனை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் கோரியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதியின் பின்னர் பாடசாலை மாணவர்களுக்கான புத்தக பைகள் மற்றும் பாதணிகளின் விலைகள் 500 முதல் 1000 ரூபாவினால் குறைக்கப்பட உள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியல் மாட்ரிட் அணியை பஞ்சர் ஆக்கிய கிரோனா



லா லிகா தொடரில் கிரோனா கிளப் அணி 4-2 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட் அணியை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது.

ஸ்பெயினின் Estadi Montilivi மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் பலம் வாய்ந்த ரியல் மாட்ரிட் அணியை எதிர்கொண்டது கிரோனா அணி.

ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் கிரோனா அணியின் வீரர் காஸ்டெலனொஸ் கோல் அடித்தார். அதனைத் தொடர்ந்து 24 ஆவது நிமிடத்தில் அவரே மீண்டும் ஒரு கோல் அடித்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரியல் மாட்ரிட்டின் அணி வீரர் வினி ஜூனியர் 34 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். அதன் பின்னர் நடந்த இரண்டாம் பாதியில் ரியல் மாட்ரிட் அணிக்கு வேலெண்டின் சிம்ம சொப்பனமாக விளங்கினார்.

மின்னல் வேகத்தில் செயற்பட்ட அவர் 46 மற்றும் 62 என இரண்டு கோல்கள் அடித்து மிரள வைத்தார். ரியல் மாட்ரிட் வீரர் லுகாஸ் வஸ்யூஸ் 85 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

இறுதியில் கிரோனா அணி 4-2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள ரியல் மாட்ரி அணியை 9 ஆவது இடத்தில் உள்ள கிரோனா அணி வீழ்த்தியுள்ளது.

லா லிகா ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணிக்கு எதிராக 4 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற பெருமையை காஸ் டெலனோஸ் பெற்றார். இவர் ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# மும்பையை வீழ்த்தியது குஜராத்

அகமதபாத்தில் நடைபெற்ற போட்டியில் 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தியது குஜராத்.

டாஸ் வென்ற மும்பை அணி பீல்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பட்டிங் செய்த குஜராத் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 207 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர் சிப்மன் கில் அதிரடியாக ஆடி 56 ஓட்டங்கள் குவித்தார். டேவிட் மில்லர் 46 , அபினவ் மனோ கர் 42 ஓட்டங்கள் விளாசினார்கள்.

மும்பை இந்தியன்ஸ் தரப்பில் பியூஷ் சாவ்லா 2, அர்ஜுன் டெண்டுல்கர், ரிலே மெரிடித், குமார் கார்த்திகேயா, ஜேசன் பெஹ்ரன்டாப் தலா ஒரு விக்கெட்டினை எடுத்தனர்.

இதையடுத்து, 208 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணி களமிறங்கியது.

முன்னணி வீரர்கள் விரைவில் அவுட்டாகினர். இதனால் மும்பை அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. அந்த அணியில் வதேரா கேமரூன் கிரீன் 33 சூர்யகுமார் 23 ஓட்டங்களை எடுத்தார்.

இறுதியில், மும்பை அணி 9 விக்கெட்டுக்கு 152ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வென்று, புள்ளிப்பட்டியலில் 2 ஆம் இடத்தில் உள்ளது. (6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2818

### திலீபன்

டப்பா நிறைய ஒரு கிலோ ஐஸ்கிறீம் சாப்பிட்டாலும் வயிறு மட்டும்தான் நிறையுது...



மூடியில இருக்கிற ஐஸ்கிறீமை நக்கி சாப்பிட்டாதான் மனசு நிறையுது...

### கனுசாந்

பாட்டிகளை விட சிறந்த மருத்துவரும் இல்லை...





தாத்தாக்களை விட சிறந்த ஆசிரியரும் இல்லை...

### இனியா

இப்போ உனக்கு தினசரி டேட்டா முடிஞ்சுருச்சுன்ன என்ன பண்ணுவாய்? அடுத்த நாள் டேட்டா வருதுக்கு 12 வரைக்கும் வெயிட் பண்ணுவன்...



நீ உன் போன்ல அடுத்த நாளோட திகதிய மாத்திவிட்டின்னா அடுத்த நாளோட டேட்டா இன்னைக்கே வந்திரும்ல...

### நிஷாந்

இதெல்லாம் நாய்க்குட்டியாம்... நான் சிக்கன் பகோடான்னு நினைச்சிட்டன்.



### அர்ச்சனா

ஜப்பான்காரன் வேலை செய்யலன்னா செத்துடுவான்.

சீனாக்காரன் சூதாடாம இருந்தால் செத்துடுவான்.

நம்ம சொந்தக்காரன் நாம சந்தோசமா இருந்தா செத்துடுவான்.

### கம்ஷாயினி

5 லட்சம் ரூபாய் வாட்சை வாங்கி 3 லட்சத்துக்கு வித்தியாமே ஏன்?



வாட்சை வாங்குன பிறகுதான் தெரிஞ்சது எனக்கு மணி பார்க்க தெரியாதுன்னு அதுதான் வித்துட்டன்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளி நபர் மலேசியாவில் தூக்கிலிடப்பட்டார்

(மலேசியா)

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் இந்திய வம்சாவளியை சேர்ந்தவருக்கு மலேசியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தங்கராஜு சுப்பையா (46) என்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் போதைப்பொருள் பயன்படுத்தியதற்காக கடந்த 2014 இல் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருவருடன் இவருக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது. அவர்கள் வழியாக ஒரு கிலோ போதைப்பொருளை கடத்த திட்டமிட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து, உயர் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து 2018 இல் தீர்ப்பளித்தது.

தங்கராஜு தூக்கிலிடப்படவுள்ளதாக கடந்த சில நாட்களுக்கு முன்பு அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பிற்கு சமூக செயற்பாட்டாளர்கள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், தங்கராஜு சுப்பையா நேற்று தூக்கிலிடப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு சட்டங்கள் சிங்கப்பூரில் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. போதைப்பொருள் வைத்திருக்கும் குற்றத்திற்கு சிங்கப்பூரில் கட்டாய மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

இந்த குற்றங்களுக்காக கடந்த ஆண்டில் மட்டும் 11 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. போதைப்பொருள் குற்றத்துக்காக அந்நாட்டில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், 6 மாத இடைவெளிக்குப் பிறகு, தற்போது இந்திய வம்சாவளி நபருக்கு தண்டன்னை நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி)

# இலாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது ஏன்? - சஜித் கேள்வி

(கொழும்பு)

ஐ.எம்.எப் உடன்படிக்கை மற்றும் கடன் மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக அடுத்த மூன்று நாட்களுக்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், எதிர்க்கட்சியில் இருந்த போது வெளிப்படைத்தன்மை குறித்து பேசிய ரணில் விக்கிரமசிங்க தற்போது, உடன்படிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிக்காமை குறித்து கவலை வெளியிட்டார்.



அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தப் போவதில்லை என மொட்டுக் கட்சியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தினை சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, டெலிகொம், அம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்டவற்றை எவ்வாறு இன்று விற்க முடியும் என்றும் கேள்வியெழுப்பினார்.

எதிர்க்கட்சி என்பதால், அனைத்து விடயங்களுக்கும் எதிர்ப்பினை வெளியிடப் போவதில்லை என குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ இலாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது ஏன் எனறும் கேள்வியெழுப்பினார்.

அடுத்து வரும் மூன்று நாட்களுக்கு அரசாங்கத்துடன் பேச்சு நடத்த நாம் தயாராகவே உள்ளதாகவும் எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சக்தி என்றும் ஆளும் தரப்புடன் இணைந்து செயற்படாது என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார். (நி)

# ஒய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் சந்தாப் பணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒய்வூதிய நம்பிக்கை நிதியங்களுக்கான) அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தை 100% வீதத்தால் அதிகரித்து வழங்குவது, மானியங்களை அதிகரித்து வழங்குவது தொடர்பில் கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படடுள்ளது என யாழ்.மாவட்ட சங்க பகிரங்க சேவைகள் ஒய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (6)

## மௌனகுரு சுவாமிகளின் ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 118 ஆவது ஜெயந்தி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் பூஜைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெற்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூஜையும் நடைபெறும். (6)

# 4 மாதங்களுக்குள் 9 நிலஅதிர்வுகள்

## புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம்

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டில் 9 நிலஅதிர்வுகள் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. 4 மாதங்களுக்குள் 9 தடவைகள் நிலஅதிர்வுகள் பதிவாகிய முதலாவது சந்தர்ப்பம் இதுவென பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் பெரும்பாலான நில அதிர்வுகள் நாட்டின் உட்பகுதியில் பதிவாகியுள்ளதுடன், சில நிலஅதிர்வுகள் நாட்டை அண்மித்த கடற்பிராந்தியத்தில் பதிவாகியுள்ளன.

அதிகூடிய மெக்னிடியூட் அளவான நிலஅதிர்வு புத்தல - சூரியவெவ பகுதியில் பதிவாகியிருந்தது.

நாட்டில் பதிவாகிய நிலஅதிர்வுகள் தொடர்பான தரவுகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த தரவுகளை சர்வதேச தரவுகளுடன் ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)


# கண்ணீர் அஞ்சலி

டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர். **செல்லர் தம்பிஜயா**



மண்ணில் 24.09.1946

விண்ணில் 24.04.2023

எமது சங்கத்தின் ஓய்வு பெற்ற பணியாளரான (களஞ்சிய முகாமையாளர்) அமரர். செல்லர் தம்பிஜயா, 24.04.2023 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள்,பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (F-6434)

பிரிவால் துயருறும் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.


# இராசிபலன்

27.04.2023
சித்திரை 14 , வியாழக்கிழமை
சப்தமி பிற்பகல் 2.34 மணிவரை

புனர்பூசம் காலை 7.55 மணிவரை
சுபநேரம் -7.29-8.59 மணிவரை
இராகுகாலம்- 1.29-2.59 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம்

வளவன்

**மேஷம்:** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்,கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணத்தால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்,செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள்

**மகரம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**ரிஷபம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், செய்தொழிலில் ஊக்கத்தோடு பணி புரிவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விட்டுக்கொடுத்துச் செல்வதால் விருப்பங்கள் நிறைவேறலாம்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான நன்மையுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

**மிதுனம்:** தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாடு காரிய வெற்றி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு:** எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பில் பலர் பங்கெடுத்துக் கொண்டால் வேலை எளிதாகி விடும்.

# யாழ்.போதனா மருத்துவமனையில் குருதித்தட்டுப்பாடு

## விரைந்து உதவுமாறு குருதிக்கொடையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் இருக்க வேண்டிய குருதியின் அளவு 330 பைந்த் ஆகும். தற்போது உள்ள குருதியின் அளவு 181 பைந் ஆகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாமல் உள்ளதாக போதனா இரத்த வங்கி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

தொடர்ச்சியாக இரத்ததான முகாம்களை நடத்தி குருதியை சேகரித்த போதிலும் குருதி சேகரிப்பை விட குருதி விநியோகம் அதிகரித்து செல்கிறது.

இதனால் குருதியின் கையிருப்பு குறைந்த பட்சத்திலேயே காணப்படுகிறது.

இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை விநியோகிக்க முடியாமல் உள்ளது.

ஆகவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகள் உங்களுக்கு அருகில் இயங்கும் குறித்த இரத்த வங்கியிலோ அல்லது இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இரத்ததானம் செய்யுமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## பனை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை



(அராலி)

உழவு இயந்திரத்தில் பதினொரு பனைமரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடம் அனுமதிப்பத்திரங்கள் எவையும் இருக்கவில்லை.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் பனை மரங்கள் அழிக்கப்படுவதாக காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் அசேல அத்துக்கார அவர்களது தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

குறித்த சந்தேகநபர், உழவு இயந்திரம் மற்றும் பனைமரக் குற்றிகள் என்பவற்றுடன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாக நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-104)

## உலக பூமி தினம் குருநகரில் முன்னெடுப்பு



(அராலி)

கடல்சார் சுற்றுசூழல் பாதுகாப்பு அதிகார சபை, யாழ். மாநகரசபை, யாழ். மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இலங்கை கடற்சூழல் மாசடைவதைத் தடுக்கும் வகையில் உலக பூமி தினம் கடந்த திங்கட்கிழமை யாழ். குருநகர் தொடர்மாடிக் கட்டடத் தொகுதி கடற்கரைப்பகுதியில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் பிரணநாதன், வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரட்ண, யாழ். பிரதேச செயலர் ச.சுதர்சன், யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன், கிராமசேவையாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-104-106)

## தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்றலில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கி மற்றும் 80 அடி நீளமான இடி தாங்கிக்குரிய செப்பினால் ஆன இணைப்பு திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தந்தை செல்வா சதுக்கத்தில் நீண்ட காலமாக நீர் இறைக்கும் மோட்டார் திருட்டும் இடம் பெறுவதாக தந்தை செல்வா சதுக்க பராமரிப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

கிட்டத்தட்ட மூன்று தடவைகள் ரூபா 75 ஆயிரம் பெறுமதியான நீர் இறைக்கும் மோட்டார் திருடப்பட்டுள்ளதாகவும் திருட்டு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்து திருட்டு இடம் பெறுவது கவலையளிப்பதாக தெரிவித்தனர். (நி-6-33)



தந்தை செல்வாவின் 46 ஆவது நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் நடந்த நிகழ்வின் போது தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தினார்.

(படம்:-சிவசாந்தன், கஜிந்தன்)

## மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலே முதல் தடவையாக யாழ்.பல்கலைகழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி தொடங்கி 25 ஆவது ஆண்டை நிறைவையொட்டி உடற்கல்வி டிபளோமா ஆசிரிய சங்கத்தின் ஏற்பாட்டில் 8.10.12.14.16 வயதுப்பிரிவின் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்ட சுற் றுப்போட்டி Northern sports college இல் எதிர்வரும் மே 5 ஆம் திகதி நடைபெறவுள்ள தால் பங்குபற்ற விரும்புபவர்கள் பதிவுகளை 01.05.2023 குறி த்த திகதிக்கு முன்னர் உறுதிப் படுத்துமாறு உடற்கல்வி டிப்ளோமா சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் அறிவித்துள்ளார். (நி-6)


## 'வடந்தை' நூலுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வடமாகாண பண்பாட்டம்சங்களை உள்ளடக்கிய 'வடந்தை' நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் குறித்த, மேலதிக தகவல்களைப் பெற 021 205 4105 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா அறிவித்துள்ளார். (நி-6)

மொறட்டுவ பல்கலைக் கழக தமிழிலக்கிய மன்றத்தால் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மாவட்ட ரீதியான "சொற்கணை-2023" என்னும் பட்டிமன்ற போட்டி யில் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி 1 ஆம் இடத்தைப் பெற்று தேசியப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சியாக வலுக்கும் எதிர்ப்புகளால் உத்தேச சட்டமூலம் சமர்ப்பிப்பதில் மேலும் தாமதம்

(கொழும்பு)

**தொடர்ச்சியாக வலுத்துவரும் எதிர்ப்புக்கள் மற்றும் ஆளும் கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடு போன்ற காரணங்களால் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதை அரசு தாமதப்படுத்தி யுள்ளது.**

இந்த சட்டமூலம் தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடலுக்கு களம் அமைக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவது தாமதப் படுத் தப் பட்டுள்ளது.

இந்த வாரம் குறித்த சட்டமூலத்தின் முதலாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் பாராளுமன்ற சமர்ப்பிப்பு தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராக கிளம்பியுள்ள எதிர்ப்புக்கள் மற்றும் ஆளும்கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகள் போன்றவை தாமதத்திற்கு காரணம் என கருதப்படுகிறது. (நி)

# சூடானில் நிர்க்கதிக்குள்ளான 13 இலங்கையர்கள் மீட்பு

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சவுதி அரேபிய அரசாங்கத்தின் ஆதரவுடன் சூடானில் தங்கியிருந்த 13 இலங்கையர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் சவுதி அரேபியாவின் ஜெத்தா நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 12 இலங்கையர்களை சூடானிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. சூடானில் தொடர்ந்தும் தங்கியுள்ள இலங்கை பிரஜைகளை இந்தியா மற்றும் சவுதி அரேபியாவின் ஆதரவுடன் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் நைரோவில் உள்ள தூதரகம், காடோன் நகரில் உள்ள கன்சியுலர் அலுவலகம், சூடான் அதிகாரிகள் மற்றும் காடோன் நகரில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றை தொடர்பு கொண்டு இலங்கையர்களை பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சூடானில் வசிக்கும் இலங்கையர்கள் தொடர்பான தரவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நைரோவிலுள்ள இலங்கை தூதரகத்தின் மின்னஞ்சல் முகவரி மற்றும் +20 127 2813000 என்ற தொலைபேசி இலக்கம் ஆகியவற்றினூடாக தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன், காடோன் கன்சியுலர் அலுவலகத்தின் +249 91239 4035 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆதனப் பெயர் மாற்றம்

இல 36/8,36/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 05 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் சொந்தக்காரர் என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி இலக்கம் 36/8, 36/10 ஐ, சேர்ந்த டேவிற் அலெக்ஸாண்டர் 15.12.1997 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் உறுதி இல. 1742 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் அவர்கள் தனது பூட்டன் வெலிச்சோர் இன்னேசம் காலத்திலிருந்து அவரின் மகளான டேவிட் பெண் அன்னம்மாவைத் தொடர்ந்து ஆட்சியில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தங்கு தடையின்றி இருந்து வருவதாக் வெளிப்படுத்துகிறார்.

பின்னர் யாழ்ப்பாணம். இராஜேந்திரா வீதி 42/9 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் கைம்பெண் றெஜினாவும் தற்போது பிரான்சில் இருக்கும் தர்சன் தர்மரட்ணமும் பெண் ஜெரின் அலெக்சியாவும், இக்னேசியஸ் லொயலா அலெக்சாண்டரும் மொறிசியஸ் லொயலா அலெக்சாண்டரும் ஆகியோர் தங்கள் அற்றோனி தத்துவக்காரர் யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதி இல.42/9, ஐ சேர்ந்த சின்னத்துரை சிவருபன் பெண் ஜறின் சோபியா மூலம் 2013.03.03 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.லிங்கா துரைராஜா முகதாவில் உறுதி இல 9027 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிளன்சியுஸ் லொயலா அலெக்சாண்டருக்கு நன்கொடையாகக் கொடுத்துள்ளனர்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை. "குளத்தில் வளவும் மாவிலங்கையடி வளவும்", இது 1990.05.05 ஆம் திகதி நில அளவையாளர் ஏ.ஜே.யோசேப் அளந்து தயாரித்த 105 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்ட நெற்பரப்பு 02 குளி 07ம் அதற்குச் சேர்ந்தவைகளும். இதன் எல்லை.

கிழக்கு -10 அடி அகலம் கொண்ட பொதுப்பாதை.
வடக்கு - துண்டு 2 என அடையாளமிடப்பட்ட ஆதனம்.
மேற்கு-ஜெயசீலன் பெண் சர்மாவின் ஆதனம்.
தெற்கு - துண்டு 4 என அடையாளமிடப்பட்ட ஆதனம். இதடங்கலும்.
சோலைவரி மதிப்பீட்டு எண் 36/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆதன அட்டவணை 2**

வடமாகாணம் , யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "குளத்தில் வளவும் மாவிலங்கையடி வளவும்", இது 1990.05.05 ஆம் திகதி நில அளவையாளர் ஏ.ஜே.யோசேப் அளந்து தயாரித்த 105 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 4 என அடையாளமிடப்பட்ட நெற்பரப்பு 02 குளி 07 ம் அதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை.

கிழக்கு - 10 அடி அகலம் கொண்ட பொதுப்பாதை.
வடக்கு - துண்டு 3 என அடையாளமிடப்பட்ட ஆதனம்.
மேற்கு- சத்தியசீலன் பெண் சர்மாவின் ஆதனம்.
தெற்கு- துண்டு 5 என அடையாளமிடப்பட்ட ஆதனம், இதடங்கலும்.
சோலைவரி மதிப்பீட்டு எண் 36/ 8 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தற்போது கிளன்சியஸ் லொயலா அலெக்சாண்டர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கிளன்சியஸ் லொயலா அலெக்சாண்டர் என்லும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

**ஆணையாளர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

 சீ-6435

# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2023**

எமது பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டமானது 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் புதிய பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளதால் அனைத்துப் பெற்றோர்களும் வருகை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அதிபர்.** (சீ-6436)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 250 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 |
| கோவா | 180 | 160 | 280 |
| கரட் | 120 | 220 | 150 |
| பூசணி | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 140 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 130 |
| பாகற்காய் | 300 | 450 | 300 |
| வெண்டக்காய் | 150 | 180 | 150 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 |
| பீற்றூட் | 160 | 150 | 180 |
| க்றிமிளகாய் | 250 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 |
| போஞ்சி | 200 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 450 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | 240 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 135

# பாரதி பாஸ்கர் மேடையில் கூறிய ஜென் கதை



வாழ்க்கையில் பல சோதனைகளை அடைந்த ஒரு தொழிலதிபர் தான் மதிக்கும் ஆன்மிக குருவிடம் சென்று தன் நிலையை புலம்ப ஆரம்பித்தார்.

தொழிலதிபர்: குருவே என் வாழ்க்கையில எல்லாமே முடிஞ்சு போச்சு. எதுவும் சரியில்ல, மனைவி சரியில்ல, பிள்ளைகள் சரியில்ல, தொழிலில் தோல்வி, வீதியில் நான் நடந்து போகும் போது யாரும் மரியாதை கொடுப்பதில்லை நான் இனி வாழ்க்கையை எப்படி வாழ்வது குருவே ?

குரு: ஒன்றும் கவலைப்படாதே. நான் உனக்கொரு மருந்து கொடுக்கிறேன். குரு ஒரு குவளையில் தண்ணீர் எடுத்து அதில் 4 கரண்டி (ஸ்பூன்) உப்பை அள்ளிப் போட்டு அதை தொழிலதிபரிடம் கொடுத்து குடிக்க சொன்னார். அதை குடித்த தொழிலதிபருக்கு குமட்டல் ஏற்பட்டு அந்த தண்ணீரை கீழே துப்பினார்.

தொழிலதிபர்: இவ்வளோ உப்பு போட்டால் எப்படி குருவே குடிக்க முடியும். எனக்கு குமட்டுகிறது எனக் கூற குரு: ஓ அப்படியா என்னோடு வா . அருகில் ஒரு குளத்திற்குக் கூட்டிச் சென்று குரு அந்தக் குளத்தில் 4 கரண்டி (ஸ்பூன்) உப்பை போட்டு பின் தண்ணீரை குடிக்க சொன்னார்.

குரு: எப்படி இருக்கு தண்ணீர்?

தொழிலதிபர்: நல்லா இருக்கு குருவே

குரு: இனிப்பா இருக்கா?

தொழிலதிபர்: ஆமா இனிப்பா இருக்கு

குரு: அதெப்படி இனிப்பா இருக்கும்? அதே 4 கரண்டி உப்பை தானே இதுலயும் போட்டேன் அப்புறம் எப்படி இனிக்கும்.

தொழிலதிபர்: என்ன குருவே விளையாட்டு? அது சின்ன குவளை அதனால் குமட்டியது. இது பெரிய குளம் குருவே அதனால் குமட்டவில்லை.

குரு: உன் மனதை ஏன் குவளையாக வைத்திருக்கிறாய் ? குளம் போல் வைத்துக்கொள். வருகின்ற கவலை என்ற உப்பு கரைந்து விட்டாலும் இனிமை மாறாத குளமாக உன் மனமிருந்தால் ஏன் உனக்கு குமட்டல் வரும்? அப்படி தான் இருக்கும். அப்படி இருந்தால் தான் அது வாழ்க்கை.

இதை தான் இன்னும் தெளிவாக கவியரசு கண்ணதாசன் தனது மந்திர வரிகளால் எடுத்துரைத்திருப்பார்.

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை"

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் வைபர் இலக்கத்திற்கு அல்லது Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

## கிளிநொச்சி மாவட்ட

# விவசாய நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வு

(கிளிநொச்சி)



கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்திக்குழுக் கூட்டம், நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டுக்கான சிறுபோகச் செய்கை மற்றும் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் விவசாய நடவடிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டுக்கான அனைத்து விவசாய திட்டங்கள் மற்றும் செயற்படுத்தல் என பல்வேறு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இரணைமடுக் குளம் உள்ளிட்ட குளங்களின் கீழான சிறுபோக நெற்செய்கை மற்றும் ஏனைய உப உணவுப் பயிர்ச்செய்கை, வீட்டுத்தோட்டம், விலங்கு வளர்ப்பு முதலிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 2023 ஆம் ஆண்டு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் (நிர்வாகம்) சிறிமோகனன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் (காணி) திருலிங்கநாதன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர், நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரிகள், தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் அதிகாரிகள், நெல் ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (நி-6)

# சட்டவிரோத காடழிப்பை தடுத்தவருக்கு மிரட்டல்

## பொலிஸில் முறைப்பாடு பதிவு

(குருமன்காடு)

காடழிப்பை வெளிப்படுத்திய ஆசிரியருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதுடன், சமூக வலைத்தளங்களிலும் அவதூறு ஏற்படுத்தப்படுவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் நேற்று முன்தினம் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் கடந்த சில நாட்களாக இரண்டு கிராம அலுவலர்களின் துணையுடன் காடழிப்பு இடம்பெற்று வந்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற அக்கிராம மக்களும் கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் அதனை தடுத்து நிறுத்தியதுடன், இது தொடர்பில் அரச அதிபரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த பிரச்சினையை வெளிக்கொண்டு வந்த ஆசிரியருக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி மிரட்டியுள்ளனர்.

போலி முகநூலின் ஊடாக குறித்த ஆசிரியரின் புகைப்படத்தை பதிவிட்டு அவதூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளரிடம் முறையிட்டுள்ளதுடன், வவுனியா பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-6-250)

# மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு முன்னெடுப்பு

(மன்னார்)



மன்னார் மாவட்ட செயலக ஏற்பாட்டில் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் மற்றும் பாடசாலையிலிருந்து இடை விலகியவர்கள் தமது திறன்களை அடையாளம் கண்டு அதனூடாக தமக்கு பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.


குறித்த நிகழ்வில் சுமார் 40 இற்கும் அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் உயர்கல்வி வழங்கும் நிறுவனங்கள் , பயிற்சி வழங்கும் நிறுவனங்கள், வியாபார ஊக்குவிப்பு செயற்பாடுகள் உடன் தொடர்புடைய நிறுவனங்கள் எனப் பல தரப்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டது. மேலும் வேலை வாய்ப்பு குறித்து வீதியோர நாடகம் அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை-2022
# விஞ்ஞானம் -II

## பகுதி A

**01. A.** உருவில் நகரமயமாகும் சூழல் ஒன்று தரப்பட்டுள்ளது:




I.மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள சூழல் நேயமான சக்தி உற்பத்தி முறையைப் பெயரிடுக.

II. மின் உற்பத்தி செய்யப் பயன்படுத்தக்கூடிய சில முறைகள் மேலே படத்திலுள்ள சூழலில் காணப்படுகின்றன. அவ்வாறான இரண்டு முறைகளைத் தருக.

........................................

III. தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் அமில மழையை ஏற்படுத்தக் காரணமாய் அமையும் வாயுவொன்றைத் தருக.

........................................

IV.குப்பைமேடு அருகே ஏற்படக்கூடிய பிரச்சினைகள் 2 தருக.


........................................

........................................

V. பயிர்ச்செய்கை நிலத்தில் சேதனப் பசளை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை ஒன்று தருக.

........................................

**B.**




I.காடு ஒரு சூழற் தொகுதியாகும். இங்கு காணப்படக்கூடிய இடைத் தொடர்புகள் 2 தருக.

........................................

II. காட்டில் காணப்படக்கூடிய உணவுவலை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

அ.மேலே தரப்பட்டுள்ள உணவுவலையில் உற்பத்தியாக்கி எது?

........................................

ஆ. பார உலோகங்கள் அதிகளவு செறிவடையக்கூடிய அங்கி எது?

........................................

இ.மேலே உணவு வலையிலிருந்து நான்கு இணைப்புகளைக் கொண்ட உணவுச் சங்கிலி ஒன்றை எழுதுக.

........................................

**C.** I. சில காலத்தின் பின்னர் மேற்படி நீர்நிலையில் பச்சைநிற அல்காக்களின் படையொன்று உருவாக்கி துர்நாற்றம் ஏற்பட்டது. இந்நிலை எவ்வாறு அழைக்கப்படும்?

........................................


II. அந்நிலை ஏற்படக் காரணமான அயன் ஒன்றைத் தருக.

........................................

III. மேற்படி நீர்நிலையில் துர்நாற்றம் ஏற்படக் காரணமான வாயுவொன்றைத் தருக.

........................................

**02. A.** பெண் இனப்பெருக்கத் தொகுதியின் பருமட்டான படம் கீழே தரப்பட்டுள்ளது.




I.மேற்படித் தொகுதியில் ஒடுங்கற்பிரிவு நிகழும் இடத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்தைத் தருக.

........................................

II.சூழ் கலம் ஒன்றின் கருக்கட்டல் நிகழும் இடத்திற்கான ஆங்கில எழுத்தை எழுதுக?

........................................

III. முதிர் மூலவுருக்கான போசனையை வழங்கும் பகுதி எது?

........................................

IV. குட்டி ஈனுதல் கூர்ப்பில் முன்னேறிய இயல்பொன்றாகும் என்பதற்கு நீர் முன்வைக்கும் காரணம் ஒன்று தருக.

........................................

V. கீழ்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| ஓமோன் | இலக்கு அங்கம் / பகுதி | தொழில் |
|---|---|---|
| இலூற்றினாக்கும் ஓமோன் (LH) | 1. .................... | 2. .................... |
| புரோஜெஸ்திரோன் | 3. .................... | 4. .................... |

**B.** தாவர, விலங்கு உடல்களில் வெவ்வேறு வகையான இழையங்கள் காணப்படுகின்றன.




I.மேற்படி இழையங்களை தாவர இழையம், விலங்கிழையம் என வகைப்படுத்துக. (ஆங்கில எழுத்துக்களை எழுதுக.)

தாவர இழையம்........................................

விலங்கிழையம்........................................

II. கீழே தரப்பட்டுள்ள இயல்புகளைக் கொண்ட இழையங்களுக்குரிய ஆங்கில எழுத்தை எழுதுக.

a). சிக்கலான நிலையிழையம்....................

b) குருதிக் கலன்களின் சுவர்களில் காணக்கூடியது....................

c) உணவைக் கடத்தும் இழையம்....................

**03.**

| i | | | | | | | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | ii | iii | iv | v | vi | vii | P |
| | | | Q | | | R | |
| | | S | T | | | | U |
| V | | | | | | | |

**A.** ஆவர்த்தன அட்டவணையின் முதல் 20 மூலகங்களில் உள்ள சில மூலகங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (இவை உண்மைக் குறியீடுகள் அல்ல.) இவ் எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

I. கீழ் உள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமான மூலகங்களைக் குறிக்கும் எழுத்துக்களை தரப்பட்ட இடைவெளியில் எழுதுக.

a) ஈரியல்புடைய ஒட்சைட்டை உருவாக்குவது?

........................................

b)இலத்திரனியல் துணைக்கூறுகள் தயாரிக்கப் பயன்படும் மூலகம்?

........................................

c) இதன் ஒரு பிறதிருப்பம் கண்ணாடி வெட்டப் பயன்படும்?

........................................

d) முதலாம் அயனாக்கல் சக்தி அதிகம் உள்ள மூலகம்?

........................................

II.அயன்பிணைப்பை ஏற்படுத்தும் மூலகச் சோடியைத் தெரிவு செய்து எழுதுக?

........................................

III. மூலக அணு V யானது அணு U இன் இலத்திரன் நிலையமைப்பை பெறுவதற்கான அரை அயன் சமன்பாட்டை எழுதுக.


........................................

IV.Q,R இடையே தோன்றும் பிணைப்பின் லூயிஸின் கட்டமைப்பை வரைக.

........................................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

B. ஆய்வுகூடத்தில் குறித்த வாயுவொன்றை உற்பத்தி செய்து இனங்காண அமைக்கப்பட்ட உபகரண ஒழுங்கமைப்பை படம் காட்டுகின்றது.




Zn துண்டு + ஐதான HCl

I. X,Y உபகரணங்களைப் பெயரிடுக.
X - ..........................................
Y- ..........................................

II. குவளையினுள் நிகழும் இரசாயனத் தாக்கத்தின் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது. அதனை சமப்படுத்துக.

$$HCl_{(aq)} + Zn_{(s)} \longrightarrow ZnCl_{2(aq)} + H_{2(g)}$$ (பு-01)

III. வாயு Z இனுள் எரியும் தணற்குச்சியை இடும் போது பெறப்படும் அவதானம் என்ன?
..........................................


C. திரவ பெற்றோலிய வாயுவின் கூறுகளாக புரொப்பேன், பியுட்டேன் என்பன காணப்படும்.

I. மேற்படி வாயுக்கள் ஐதரோகாபன்கள் என அழைக்கப்படக் காரணம் என்ன?
..........................................

II. புரொப்பேன் மூலக்கூறின் சூத்திரத்தை எழுதுக.
..........................................

III. புரொப்பேன் ஒட்சிசனுடன் பூரணமாக தகனமடைந்து உருவாகும் விளைவுகள் எவை?
..........................................

04.





A. P,Q,R,S ஆகிய கம்பிகளைப் பயன்படுத்தி தடையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண மாணவர் குழுவொன்று செய்த அமைப்பை மேலே படம் காட்டுகிறது. Q,R,S இன் குறுக்குவெட்டு பரப்பு சமனாகும். P,Q,S ஆகியன நீளத்தில் சமனானவை. P,Q,R ஆகியன நிக்கிரோம் கம்பியாக இருப்பதுடன் S ஆனது செப்புக்கம்பி ஆகும்.

I. தொடுகைச் சாவியை P,Q,R,S கம்பிகளின் அந்தங்களில் வெவ்வேறாக தொடுகையுறச் செய்து மின்குழிழ் ஒளிரும் முறைக்கேற்ப தடையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான தகவல்களை கீழே அட்டவணையில் எழுதுக.

| கம்பிகள் | மின்குமிழில் அதிகம் பிரகாசம் ஏற்படுத்தும் கம்பிகள் | தடையில் செல்வாக்குச் செலுத்தும் காரணி |
|---|---|---|
| P,Q | P | 1. .................... |
| R,S | 2. .................... | கம்பியின் நீளம் |
| Q,S | 3. .................... | 4. .................... |

B. பொறிமுறை அலைகளின் துணிக்கைகள் அதிரும் விதத்தை கீழே படம் காட்டுகிறது. A,B அத்துடன் C,D ஆகியன துணிக்கை அதிரும் திசைகளைக் குறிக்கின்றது.





I. A,B திசையில் துணிக்கைகள் அதிரும் பொறிமுறை அலை வகை யாது?
..........................................

II. C,D திசையில் துணிக்கைகள் அதிர்ந்து உருவாகும் அலை வகைக்கு உதாரணமொன்று தருக.
..........................................

III. ஒரு நிலையான நீர்ப்பரப்பில் கல்லொன்றைப் போடும் போது அலை பரவிச் செல்வது மேலுள்ள எவ்வுருவின் மூலம் காட்டப்பட்டுள்ளது?
..........................................

C. R1, R2 எனும் பெறுமானம் தெரியாத இரு தடையிகளின் சமானத் தடையை காண்பதற்கு அமைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.




I. உபாங்கம் Q வைப் பெயரிடுக?
..........................................


II. இப்பரிசோதனையில் பெறப்பட வேண்டிய வாசிப்புக்கள் இரண்டை எழுதுக.


1. ..........................................
2. ..........................................

III. மேல் ii குறிப்பிட்ட ஒரு வாசிப்பைப் பெறுவதற்கு அவசியமான உபகரணம் ஒன்று உருவில் தரப்படவில்லை. அவ்வுபகரணம் எது?
..........................................

IV. சமானத்தடை R இற்கான கோவை ஒன்றை R1, R2 ஆகியவற்றின் அடிப்படையில் தருக.
..........................................

D. உருவில் பொருள் ஒன்றின் மீது பிரயோகிக்கப்பட்ட புறவிசையினால் உருவாகும் உராய்வு விசை தொடர்பான வரைபு தரப்பட்டுள்ளது.




மேலுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| சந்தர்ப்பம் | உராய்வு விசை வகை |
|---|---|
| a-b | 1. .................... |
| b | 2. .................... |
| c-d | 3. .................... |

(பகுதி B நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லும் மேஷ இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 12 இல் சஞ்சரித்து வந்த குரு பகவான் 22.04.2023 முதல் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். விரயாதிபதியான குரு பகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் வந்தாலும் அவை திருப்தி தரும் விதத்திலேயே அமையும். ஜென்ம குருவாக இருக்கிறாரே "ஜென்ம ராமர் வனத்திலே" என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது என்பதால் அப்படி ஏதும் நடக்குமோ என்று நினைக்க வேண்டாம். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் சுய ஜாதகத்தில் குரு இருக்கும் பாதசார பலமறிந்து அதற்குரிய வழிபாடு களை முறையாக மேற்கொள்ளுங்கள் நல்லது நடக்கும். குரு இருக்கும் இடத் தின் பலன் நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்குபவர் குரு பகவான். அவர் உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியானவர். பாக்கிய ஸ்தா னம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிப தியானவர், ஜென்மத்திற்கு வருவதால் விரயங்கள் கூடுதலாகத்தான் இருக்கும். வீண்விரயங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. ஜென்மத்தில் குரு தான் வந்தால் செலவுகள் அதிகரிக்கும். பொன், பொருட்கள் வாங்குவதும் பூமிகளின் சேர்க்கைகளும் மனதையில் மேற்கொண்டால் மனமினிக்கும் வாழ்வமையும். வந்திணைந்த குருவை வழிபட்டால் வளர்ச்சி வரும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் ஜென்மத்தில் குரு வரும் பொழுது நீங்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க இயலாது. அதே நேரத்தில் செலவுகள் அதிகரிக்கின்றதே என்று கவலைப் படவும் வேண்டாம். செலவிற் கேற்ற விதத்தில் வரவு முன்னதாகவே வந்து விடும். பூர்வீகச் சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். வெளி நாட்டு வணிகத்தால் ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை.

**வெற்றிகளை குவிக்கும் வியாழனின் பார்வை!**

"குரு பார்க்க கோடி நன்மை" என்பது பழமொழி. அதன் அருட்பார்வையினால் அஷ்ட லட்சுமியும் இல்லத்தில் அடியெடுத்து வைக்கும் வாய்ப்பு உண்டு. குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது. குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைகின்றது. அது புத்திர ஸ்தானமாகவும் இருப்பதால் பிள்ளைகளுக்கான சுபகாரியங்கள் நடைபெறும். முன்னோர்கள் கட்டி வைத்த கோவில் திருப்பணிகளைத் தொடர்ந்து செய்ய முன் வருவீர்கள். தெய்வ பலம் உங்களை வழிநடத்திச் செல்லும். குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது. மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். திருமணமானவர்களாக இருந்தால் வாழ்க்கைத் துணை வழியே நன்மை அதிகரிக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். வெளிநாட்டு முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் மூன்றாம் நபரின் குறுக்கீட்டால் வந்த பிரச்சினை அகலும். மூத்த சகோதரர் வழியில் முன்னேற்றம் கிடைக்கும். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பாக்கிய ஸ்தானம் பலம்பெறுகின்றது. எனவே பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். கூட்டு முயற்சிகளிலிருந்து விலகி தனித்து இயங்கலாமா என்று யோசிப்பீர்கள். இதுவரை பாகப் பிரிவினைக்கு ஒத்துவராத உடன்பிறப்புகள் இப்பொழுது ஒத்து வருவர். பணிபுரியும் இடத்தில் ஊதிய உயர்வும் கேட்ட சலுகைகளும் கிடைக்கலாம். கண்ணியம் மிக்க நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது குரு பகவான் ஜென்ம இராசியில் அசுவதி நட்சத்திரக் காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் பொறுமையுடன் செயற்பட வேண்டியது அவசியம். வீண் விரயங்களிலிருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். பிள்ளைகளின் வழியில் மகிழ்ச்சி தரக்கூடிய தகவல் வந்து சேரலாம். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள். வெளியூர் தொடர்புகள் ஆதாயம் தருவதாக அமையும். தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்தினால் எதிர்பார்த்த லாபத்தை அடையலாம். பரணி நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது குரு பகவான் பரணி நட்சத்திரக்காலில் சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் யோகமான நேரம்தான். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் என்பதால் அதன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப முன்னேற்றம் கூடும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை முடிவடையாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக முடிவடையும். பெண்களின் சுபச்சடங்குகள், கல்யாணம், காது குத்து போன்றவை நடைபெறும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். பிறருக்கு வாக்குறுதி கொடுக்கும் பொழுது கவனம் தேவை. கார்த்திகை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது ஜென்ம இராசியில் கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயங்களை அடைவீர்கள். உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியாக சூரியன் விளங்குவதால், பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் அனைத்தும் இப்பொழுது கிடைக்கும். நீண்டநாட்களாக தீர்வு காண முடியாத பிரச்சினைகளுக்கு இப்பொழுது தீர்வு காண்பீர்கள். தொழில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.

**ராகு - கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகு வருகின்றார். கன்னி இராசிக்கு கேது செல்கின்றார். இதுவரை குருவுடன் ராகு இணைந்திருந்தது. இப்பொழுது ராகு விலகி விட்டதால் குரு கூடுதல் பலம் பெறுகின்றார். எனவே அவரது பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கும். அதே நேரம் 12 இல் ராகு சஞ்சரிப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து உத்தியோகம் சம்பந்தமாக அழைப்புகள் வரலாம். கேதுவின் சஞ்சாரத்தில் ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி வந்து அலை மோதும்.

**குருவின் வக்கிர காலம்! 12.09.2023 முதல் 20.12.2023 வரை**

இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார் எனவே குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எதையும் திட்டமிட்டுச் செய்வதோடு திறமை மிக்கவர்களை பக்கபலமாக வைத்துக் கொள்ளுங்கள். பணியாளர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். நீண்ட நாளைய கனவு நனவாகும். சுயதொழில் செய்பவர்கள் வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் அமைப்பு வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் நட்பு பலப்படும். கேட்ட சலுகைகள் கிடைக்கும்.


**குரு பகவானுக்குரிய சுலோகம்...**

தேவனாம் சரிஷனாம்ச குரும் காஞ்சன ஸந்நிபம் புத்தி பூதம் த்ரிலோ கேஸம் தம் நமாமிப்ரஹஸ்பதிம் குரு பகவானைப் போற்றிப் பாடும் மேற்கண்ட பாடலைப் பாடி மேன்மைகளைப் பெறலாம். குருவை வழிபடும் பொழுது தியானத்தில் இருந்து இதைச்சொல்வது நல்லது. வீட்டில் வழிபாடு செய்பவர்கள் குரு (ஆலமர் செல்வர்) படத்தின் முன்னால் வழிபாடு செய்யலாம். 16 திரிபோட்டு விளக்கு ஏற்றுவது உகந்தது. திருமணத் தம்பதியர் ஜோடி விளக்கு ஏற்றுவது நல்லது.




## விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

மேஷ இராசியில்பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சிவிரயங்களை அதிகரிக்கச்செய்யும். வீடு மாற்றங்களாலும் இடமாற்றங்களாலும் மன அமைதி குறையும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் ஒற்றுமை பலப்படும். உடன் பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளுக்கான சுப காரியங்களை காலகாலத்தில் முடிக்க வேண்டுமென்று அக்கறை செலுத்துவீர்கள். பணிபுரியும் பெண்க ளுக்கு கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும். இருப்பினும் உழைப்பிற்கேற்ற ஊதியம் உண்டு.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜையறையில் விநாயகப் பெருமான் படம் வைத்து துதிப்பாடல் பாடிவழிபடுவது நல்லது. வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு கவசம் பாடி குரு பகவானை வழிபட்டால் வளர்ச்சி கூடும். வருங்காலம் நலமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

163





என் பெயரைச் சொல்லி ஒரு தறுதலைப் பயல் உன்னை ஏமாற்றி விட்டான் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாயில்லையா?"

"வெறுமனே உங்கள் பெயரைச் சொன்னதோடு இல்லை. உங்கள் முத்திரை மோதிரத்தையும் காட்டினான். அதை அவனுக்கு நீங்கள் கொடுத்தீர்களா?"

"இல்லவே இல்லை! அப்படியெல்லாம் ஏமாந்து விட நான் உன்னைப் போல் ஏமாளியா?"

"அவனிடம் முத்திரை மோதிரம் இருந்தது உண்மை. என்னிடமும் காட்டினான். கோட்டை வாசல் காவலர்களிடமும் காட்டி விட்டுத்தான் உள்ளே புகுந்தான். நீங்கள் கொடுத்திராவிட்டால், இன்னும் ஒரே ஒரு இடத்திலிருந்துதான் அதை அவன் பெற்றிருக்க முடியும்."

"யாரைச் சொல்கிறாய்?"

"தங்களால் ஊகிக்க முடியவில்லையா? இளையராணியைத்தான் சொல்கிறேன்"

"சீச்சீ! ஜாக்கிரதை! நாக்கை அறுத்து விடுவேன்!" "நாக்கை அறுத்தாலும் அறுங்கள் தலையைக் கொய்தாலும் கொய்யுங்கள். வெகு நாளாய்ச் சொல்ல விரும்பியதை இப்போது சொல்லி விடுகிறேன். விஷ நாகத்தை அழகாயிருக்கிறது என்று எண்ணி வீட்டில் வைத்து வளர்க்கிறீர்கள். அது ஒருநாள் கடிக்கத்தான் போகிறது. நம் எல்லோரையும் நாசம் செய்யப் போகிறது! வேண்டாம்! அவளைத் துரத்தி விட்டு மறு காரியம் பாருங்கள்!"

"காலாந்தககண்டா! வெகு நாளாக உனக்குச் சொல்ல எண்ணியிருந்த ஒரு விடயத்தை நானும் உனக்கு இன்று சொல்லுகிறேன். வேறு எந்தக் காரியத்தைப் பற்றி வேண்டுமானாலும் உன் அபிப்ராயத்தை நீ தாராளமாய்ச் சொல்லலாம். என் காரியம் பிடிக்காவிட்டால் தைரியமாகக் கண்டித்துப் பேசலாம். ஆனால் நான் கைப்பிடித்து மணந்து கொண்டவளைப் பற்றிக் குறைவாக இனி எப்போதேனும் ஒரு வார்த்தை சொன்னாலும் சரி உன்னை வளர்த்த இதே கையினால் உன்னைக் கொன்று விடுவேன். உனக்குக் கத்தி பிடிக்கச் சொல்லிக் கொடுத்த நான், உன் கத்தியைப் பிடுங்கியே உன்னை வெட்டிக் கொல்லுவேன்! ஜாக்கிரதை!"

அந்த இரு சகோதரர்களும் அப்போது போட்டுக் கொண்ட ஆத்திரச் சொற்போர் சிங்கமும் சிங்கமும் மோதிப் பயங்கரமான சண்டை பிடிப்பது போலவே இருந்தது. அவர்களுடைய குரலும் சிம்ம கர்ஜனையைப் போலவே முழங்கிற்று. அவர்கள் பேசியது அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில்தான் என்றாலும், வெளியில் காத்திருந்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய குரல், விபரம் இன்னதென்று தெரியாமல் இடிமுழக்கம் போல் கேட்டது.

அதனால் தான் கோட்டை வாசலுக்குக் கூட வரவில்லை! நகர மக்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறேன்.

"அட சீ! நீயும் ஒரு மனிதனா? மீசை முளைக்காத ஒரு சிறு பிள்ளையிடமா ஏமாந்து போனாய்? உனக்குக் காலாந்தககண்டன் என்று பெயர் வைத்தேனே, என் முட்டாள்தனத்தை நொந்து கொள்ள வேண்டும். உன்னைக் கோட்டைத் தளபதியாக்கினேனே? எனக்கு இது வேண்டியதுதான்!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குருவி கொடுத்த விதை

(நேற்றைய தொடர்ச்சி)




அதன் பிறகு அவனும் மனைவியும் குழந்தைகளும் நல்ல உணவு உண்டனர். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்தனர். மிகப் பெரிய வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கினார்கள்.

உழவன் சில நாட்களில் பெருஞ்செல்வனானதை அறிந்தார் பண்ணையார். அவனிடம் வந்த அவர், டேய்! முனியா! உனக்கு எங்கிருந்து இவ்வளவு செல்வம் கிடைத்தது? உண்மையைச் சொல் என்று கேட்டார். அவனும் நடந்ததை எல்லாம் அப்படியே சொன்னான்.

தன் மாளிகைக்கு வந்தார் அவர். எப்படியாவது மேலும் செல்வம் சேர்க்க வேண்டுமென்று நினைத்தார். வீட்டில் மேல் பகுதியில் குருவிக் கூடு ஒன்றை அவரே செய்தார். குருவிகள் அவரும் அதில் தங்கும் என்று எதிர்பார்த்தார்.

அவர் எண்ணம் ஈடேறியது. ஒரு குருவி வந்து அந்தக் கூட்டில் தங்கியது. நான்கு முட்டைகள்இட்டது. நான்கு குஞ்சுகள் வெளியே வந்தன. "பாம்பு வரவே இல்லை. பொறுமை இழந்த அவர் ஒரு பெரிய கம்புடன் குருவிக் கூட்டை நெருங்கினார். மூன்று குஞ்சுகளை அடித்ுக் கொன்றார். ஒன்றன் காலை உடைத்துக் கீழே எறிந்தார்.

பிறகு, கால் உடைந்த குருவியிடம் அன்பு காட்டுவது போல் நடித்தார். வேளை தவறாமல் உணவு அளித்தார். கால் சரியான அந்தக் குருவி கூட்டைவிட்டுப் பறந்து போனது. "மூன்று விதைகளுடன் குருவி மீண்டும் வரும். அரசனை விட செல்வன் ஆவேன்" என்ற எண்ணத்தில் காத்திருந்தார் அவர்.

அவர் எதிர்பார்த்த படியே கதவைத் தட்டியது குருவி. அவரிடம் மூன்று விதைகளைத் தந்தது. "ஒன்றை வீட்டின் பின்புறம் நடு. இரண்டாவதை வீட்டின் முன்புறம் நடு. மூன்றாவதைக் கிணற்றோரம் நடு" என்று சொல்லிவிட்டுப் பறந்து சென்றது. எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தார் அவர். மூன்று தானியங்களையும் நட்டார். மறுநாளே மூன்று பெரிய பூசணிக்காய்கள் காய்த்து இருந்தன.

தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டுக்குள் கொண்டு வந்தார். அதை வெட்டினார்.

அதற்குள் இருந்து எண்ணற்ற பூச்சிகள் வெளிவந்தன. அவர் வயலில் விளைந்திருந்த பயிர்களை எல்லாம் ஒரு நொடிக்குள் தின்றுவிட்டு மறைந்தன.

வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார் அவர். முன்புறத்தில் இருந்த இரண்டாவது பூசணிக்காயை வெட்டினார். அதற்குள் இருந்து தீ வெளிப்பட்டது. அது அவரையும் அந்த மாளிகையையும் ஒருநொடிக்குள் சாம்பல் ஆக்கியது. கொடிய பண்ணையார் ஒழிந்தார் என்று ஊர் மக்கள் மகிழ்ந்தனர்.

மூன்றாவது பூசணிக்காயை உடைக்க யாருமே முன்வரவில்லை. அதற்குள் பாம்பு, தேள், பூரான்போன்ற எண்ணற்றவை இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்விச்சாலையை திறப்பவன் ஒரு சிறைச் சாலையை மூடுபவனாகிறான்.

– லா புருயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கு வாய்ப்பளிப்பது நன்மை பயக்கும்

இந்த வருடம் க.பொ.த (சா) தரப் பரீட்சையைத் நடத்தாமல் அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் படிப்பதற்கு தகுதியுடையவர்களாக அறிவிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

டலஸ் அழகப்பெரும விடுத்த இந்தக் கோரிக்கையை அரசாங்கம் எவ்வாறு பரிசீலிக்கும் என்பது ஒருபுறமிருக்க,

இது நடைமுறைக்குச் சாத்தியமா? என்பது பற்றி ஆராய்வதே பொருத்துடையதாகும்.

ஆம், இவ்வருடம் க.பொ.த (சா) தரப் பரீட்சையை நடத்தாமல் அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் கற்பதற்குத் தகுதியுடைவர்கள் என அறிவிக்கும்போது, மாணவர்களின் அடைவுமட்டத்தைக் கணிப்பிட முடியாமல் போகும்.

தவிர உயர்தரத்தில் மாணவர்கள் பாடத் தெரிவைச் செய்வதிலும் குழப்பமேற்படும்.

அதாவது பரீட்சைக்குத் தோற்றாமல் எல்லா மாணவர்களும் உயர்தரம் கற்க முடியும் என அறிவிக்கும்போது, முழு மாணவர்களும் விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளையே தெரிவு செய்வர்.

இந்த நிலைமையானது பாடசாலை மட்டத்தில் கடும் சிக்கலைத் தோற்றுவிக்கும்.

எனவே சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவது கட்டாயமானது. அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும்போதுதான் மாணவர்கள் கற்றலில் கருசனை காட்டுவர்.

அத்துடன் மாணவர்களின் ஆற்றலையும் அளவிட முடியும்.

ஆகையால் பரீட்சை நடத்துவதும் அதில் மாணவர்கள் தோற்றுவதும் தவிர்க்கப்படக் கூடியதன்று.

ஆனால் நாம் கூறுவது க.பொ.த (சா) தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மாணவர்கள் உயர்தரத்தில் கற்பதற்குத் தடை இருக்கக்கூடாதென்பதுதான்.

ஆம், ஒரு மாணவன் சாதாரண தரப் பரீட்சையில் மிகக் குறைந்தளவு பெறுபேற்றை எடுத்துவிட்டான் என்பதற்காக அந்த மாணவன் உயர்தரம் கற்க முடியாதெனக் கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது என்பதுடன் அது நல்லதொரு முறைமையும் அல்ல.

எனவே அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் கற்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

பொதுவில் சாதாரண தரப் பாட விதானத்துக்கும் உயர்தரப் பாடவிதானத்துக்கும் இடையில் நிறைந்த வேறுபாடு உண்டு.

தவிர, சாதாரண தரத்தில் அநேகமான பாடங்கள் பொதுவாக இருக்க, உயர்தரத்தில் பாடத்துறைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆகவே கணிதத்தில், விஞ்ஞானத்தில் சித்தியடைய முடியாமல்போன மாணவன், உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவு செய்து அதில் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம்.

எனினும் இதற்கான சந்தர்ப்பம் நம் நாட்டில் தடுக்கப்படுகிறது.

எனவே பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் கோரிக்கை; இனிவரும் காலங்களில் க.பொ.த (சா) தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் கற்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதாக இருக்க வேண்டும்.

உண்மையில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை என்ற ஒரே காரணத்துக்காக உயர்தரத்தில் கற்பதற்கு வழங்கப்படாத சந்தர்ப்பம் கணிசமான மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கி விடுகிறது என்பது நிதர்சனமான உண்மை.

# பாடசாலை மாணவர்களிடையே கஞ்சா பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடையே கஞ்சாவை பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாக தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

போதைப் பொருள் பயன்படுத்துபவர்கள் முதலில் எந்த வயதில் பயன்படுத்தினார்கள் என்பது குறித்த ஆய்வில், 49 சதவிகிதம் 16 முதல் 20 வயது வரை பயன்படுத்தியது தெரியவந்தது.

44 சதவீதம் பேர் 11 வயது முதல் 15 வயது வரை முதல் முறையாக போதைப் பொருளைப் பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்தது.

இளைஞர்கள் மற்றும் இளம்பருவ போதைப் பொருள் பாவனையின் சராசரி வயது குறித்து தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய ஆய்வில், 16 வயதிலேயே கஞ்சா அதிகம் பயன்படுத்தப்படுவது தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் துலே, மாவா, பாபுல் போன்ற போதைப் பொருட்கள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவலாகப் பரவியிருந்த நிலையில் அண்மைக்காலமாக ஐஸ்போதைப் பொருள் பரவும் போக்கு அதிகரித்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. (4-7-9)

## இந்திய முட்டைகளுக்கு அனுமதிச் சான்றிதழ்

### தொடர்ந்தும் இழுபறியில்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு அனுமதிச் சான்றிதழ்களை வழங்குவதில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மேலும் காலதாமதம் செய்வதால் அதனை சந்தைக்கு விநியோகிப்பதில் சிக்கல் நிலை தொடர்வதாக அரச வர்த்தக இதர சட்டக் கூட்டுத்தாபன தலைவர் ஆசிறி வலிசுந்தர கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் மேலும் 5 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4-7-9)

## திடீர் சுகவீனத்தால் பல்கலை ஊழியர் பலி

(வவுனியா)

வவுனியாவில் இருந்து தென்மராட்சி-வரணி பகுதிக்கு மரணச் சடங்கு ஒன்றிற்கு வந்த வவுனியா பல்கலைக்கழக உத்தியோகத்தர் ஒருவர் நேற்று புதன்கிழமை மதியம் திடீர் சுகவீனம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

வவுனியா பல்கலைகழகத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர் ஒருவரின் உறவினரின் மரணச் சடங்கிற்காக பல்கலைக் கழக உத்தியோகத்தர்கள் பலரும் பேருந்து ஒன்றில் வரணிக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் மரணச் சடங்கில் கலந்து கொண்ட 54வயதான பல்கலைக் கழக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதன்போது சக பணியாளர்கள் அவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பித்த நிலையில் அவர் உயிரிழநததாக தெரிவிக்கப்பட்டது. மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (4-7-9-30)

## பாகிஸ்தானுக்கு யானைகள் மறுக்கிறது அரசாங்கம்

பாகிஸ்தானுக்கு இரண்டு யானைகளை அன்பளிப்பாக வழங்கப் போவதாக வெளியான செய்தியை இலங்கை மறுத்துள்ளது.கராச்சி மற்றும் லாகூர் விலங்கியல் பூங்காக்களுக்கு இந்த இரண்டு யானைகளும் அனுப்பப்படவுள்ளதாக பாகிஸ்தானிலுள்ள இலங்கை தூதரக அதிகாரியை மேற்கோள்காட்டி முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

பாகிஸ்தானின் விலங்கியல் பூங்காவில் 17 வயதான ஆபிரிக்க யானையான நூர் ஜெஹான் உயிரிழந்ததையடுத்தே இலங்கை இரண்டு யானைகளை பரிசாக வழங்குவது குறித்த செய்திகள் வெளியாகின.

எனினும், ஊடகங்களில் வெளியான செய்திகளை நிராகரித்துள்ள இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், அவ்வாறான எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை என டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானின் மிருகக்காட்சி சாலைகளில், விலங்குகள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7-9)

## இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் முதலாவது கண்பரிசோதனை முகாம் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ் மாவட்ட சுகாதார பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-7-9)

### கோட்டாவுக்காக

## மாதாந்தம் 13 இலட்சம் செலவு செய்யும் அரசு

ஓய்வு பெற்ற ஜனாதிபதி என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மாதாந்தம் 13 இலட்சத்து 29 தாயிரத்து 387 ரூபாய் அரசாங்கத்தினால் செலவிடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளும் செலவுகள் குறித்து கடந்த காலத்தில் சமூக ஊடகங்கள் மற்றும் பிரதான ஊடகங்களில் பேசுபொருளாக மாறியிருந்தது.

இது தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் தகவல் அதிகாரியிடம் தகவல் கோரிக்கை ஒன்றை முன்வைத்த Fact Seeker அமைப்பு, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, ராஜபக்ஷ சார்பில் அரசாங்கத்தின் மாதாந்த செலவீனங்கள் எவ்வளவு? என வினவியிருந்தது.

கிடைகப்பெற்ற பதில் கடிதத்தின்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் டிசம்பர் மாதத்திற்கான ஓய்வூதியம், எரிபொருள் கொடுப்பனவு மற்றும் செயலாளர் கொடுப்பனவுகள் என்பவற்றுக்கான செலவுகளாக 9,91,000 ரூபாயும், தொலைபேசி, மின்சாரம், நீர் மற்றும் பிற செலவுகளுக்காக 3,38,387.60 ரூபாயும் செலவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7-9)

## இலவச யோகாசன வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் இலவச யோகாசன வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்த யோகாசன வகுப்புக்களானது பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 - 8 மணி வரை நடைபெறுகின்றது.

மேலும் குறித்த யோகாசன வகுப்பில் இணைந்து கொள்ள ஆர்வமுடையவர்கள் 076 050 3863 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 10

6.இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் இலங்கைக்கு வருடாந்தம் இரண்டாயிரம் தொன் தரமான மற்றும் நல்ல இன மீன்களை பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் வழங்குவதற்கு இந்தியா சம்மதித்துள்ளது. இவ் வழங்கல் வாட்ஜ் பாங்க பகுதியில் இலங்கை மீன்பிடி நடவடிக்கை நிறுத்தப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருடகாலம் 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்தப்படும்.

7.இதற்கான விதிமுறைகளை இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடியதாக செய்வதோடு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இரு அரசுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டு இலங்கையின் மீன்பிடி கப்பல்களை வாட்ஜ் பாங்கில் இருந்துதிசை திருப்பும் போது இலங்கையின் மீன்பிடி அபிவிருத்திக்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ளதை நீங்கள் தயவு செய்து உறுதிப்படுத்தினால் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன் எங்கள் இரு அரசுகளுக்கும் இடையே சரியான புரிந்துணர்வு எட்டப்பட்டுள்ளது. இந்த புரிதலை உறுதிப்படுத்தும் உங்கள் கடிதம் கிடைத்ததும் இந்த கடிதத்தில் பொதிந்துள்ள புரிதல் நமது இரு அரசுகளுக்கு இடையே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கும்.

மாண்புமிகு அவர்களே, கடல் உள்மேடு சம்பந்தமான எனது உயர்ந்த பரிசீலனையின் உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்ளுங்கள்.

கையொப்பம் /- கேவல்சிங்
இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளர்.
வெளியுறவு அமைச்சகம்,
புதுதில்லி,
23 மார்ச் 1976.

இக் கடிதத்திற்கு இலங்கை அரசின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் டபிள்யூ. ரி.ஜெயசிங்க பதில் கடிதம் அனுப்பியிருந்தார் அது கீழே தரப்படுகிறது.


மாண்புமிகு திரு. கேவல்சிங்
இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளர்
மாண்புமிகு,

மார்ச் 23, 1976 இல் உங்கள் கடிதம் கிடைத்ததை ஒப்புக்கொள்வதில் எனக்கு மரியாதை உண்டு.


உங்கள் கடிதம் பின்வருமாறு கூறுகிறது.

(கடிதத்தைப் பார்க்கவும்)

மேற்கூறியவை புரிந்துணர்வைச் சரியாக அமைக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் பெருமை எனக்கு உண்டு.



Wedge Bank -கடல் உள்மேடு




நமது இரு அரசுகளுக்கும் அது இடையே எட்டியது. உங்கள் கடிதமும் அதற்கான எனது பதிலும் இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு உடன்படிக்கையை உருவாக்குகின்றது.

இன்று முதல், இருபத்தி மூன்றாம் நாள் மார்ச் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தாறு அமுலுக்கு வரும் வகையில் மாண்பு மிகுஅவர்களே, எனது உயர்ந்த பரிசீலனையின் உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.

டபிள்யூ. ரி. ஜெயசிங்க
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள்
இலங்கை அரசு
புதுதில்லி, மார்ச் 23, 1976.

1976 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் பல நூற்றாண்டுகளாக இலங்கை மீனவர்களால் மீன் பிடிக்கப்பட்ட வளம் மிகுந்த மீன்பிடிப் பகுதியான வெட்ஜ்பாங்க் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தின் ஒரு பகுதியாக மாறியது. இதன் விளைவாக இலங்கை மீனவர்கள் வாட்ஜ் பாங்க் பகுதியில் மீன்பிடிக்கும் பாரம்பரிய உரிமையை இழந்தனர். இவ்வாறான ஒப்பந்தங்களின் மூலமாக இலங்கையின் வட பகுதியைச்சேர்ந்த மீனவர்கள் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றமை வடபகுதி மீனவர்களின் துர்ப்பாக்கியத் தன்மையை தெளிவுபடுத்துகின்றது.

குறிப்பு-"வெட்ஜ் பாங்க்" எனப்படும் பகுதி, கன்னியாகுமரி கடற்கரையில் இருந்து தென்மேற்கு திசையில், 25 நாட்டிகல் மைல் (46 கி.மீ.) தூரத்தில் உள்ள ஒரு கடல் அம்சம். (வெட்ஜ் பாங்க்கேப்கொமோரின் தெற்கில் அமைந்துள்ளது.மற்றும் பொதுவாக அகலாங்கு 7°10' N மற்றும் 8°00'N மற்றும் நெட்டாங்கு 76°40'E மற்றும் 78°00'E,இடையில் அமைந்துள்ளது) இங்கு கண்ட திட்டின் சரிவு இலகுவாக அமைந்துள்ளதால், கடல் ஆழம் குறைவாக இருக்கும். அதனால், மீன் இன விருத்தி சிறப்பாக இருக்கும். 10 ஆயிரம் சதுர கி.மீ, பரப்புள்ள இந்த பகுதியில், சர்வதேச சந்தையில் அதிக விலை போகும் மஞ்சள் மற்றும் நீல நிற சூரை மீன்கள் அதிகம் கிடைக்கின்றன. இந்த பகுதி பிரத்யேக இந்திய பொருளாதார எல்லைக்குள் இருந்தாலும் இலங்கை மீனவர்களே இந்த வளங்களை அனுபவித்து வந்தனர். 1977 இல் இந்த பொருளாதார கடல் எல்லை நிர்ணயிக்கப்பட்ட போது, "இலங்கை மீனவர்கள் அந்த பகுதியை, 1980 வரை மட்டும் பயன்படுத்திக் கொள்ள லாம்" என், இரு நாடுகளுக்கும் இடையே முடிவானது. 1977 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி இந்தியா மற்றும் இலங்கையால் பிரத்தியேக பொருளாதார மண்டலம் நிறுவப்பட்டது.

**வெட்ஜ்பாங்க்என்ற பெயர் வந்ததற்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. இது தமிழில் கடல் உள்மேடு என்று அழைக்கப்படுவதும் உண்டு. வெட்ஜ்பாங்க்கேப்கொமோரின்தெற்கில் அமைந்துள்ளது. மற் றும்பொது வாகஅகலாங்கு 7°10' N மற்றும் 8°00'N மற்றும் நெட்டாங்கு 76°40'E மற்றும் 78°00'E, இடையில் அமைந்துள்ளது.**

### 1974 மற்றும் 1976 இந்திய-இலங்கை ஒப்பந்தங்களின் விளக்கத்தில் உள்ள வேறுபாடு

1974 மற்றும் 1976 இந்திய-இலங்கை ஒப்பந்தங்களின் விளக்கத்தில் உள்ள வேறுபாடு கச்சதீவு முரண்பாட்டின் காரணங்களில் ஒன்றாகும். கச்ச தீவைச் சுற்றியுள்ள மீன்பிடி உரிமைகள் உட்பட இருநாட்டு மீனவர்களும் தங்களின்பாரம்பரிய உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள ஒப்பந்தங்கள் அனுமதிக்கின்றன என்று தமிழகஅரசும் தமிழக மீனவர்களும் வாதிடும் நிலையில், இந்திய-இலங்கை அரசுகள் மீன்பிடி உரிமை வழங்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டுகின்றன.

**கச்சதீவைச் சுற்றியுள்ள மீனபிடி உரிமைகள் உட்பட இரு நாட்டு மீனவர்களும் தங்களின் பாரம்பரிய உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள ஒப்பந்தங்கள் அனுமதிக்கின்றன என்று தமிழக அரசும் தமிழக மீனவர்களும் வாதிடுகின்றனர்.**

இந்திய மீன்வர்களுக்கு கச்சதீவில் .வலைகளை உலர்த்தும் உரிமையும் விசா இல்லாமல் ஆண்டுதோறும் புனித அந்தோனியார் பெருவிழாவில் கலந்து கொள்வதற்கானஉரிமையும் மீன்பிடிக்காமல் கடற் பயண உரிமையும் மட்டுமே வழங்கப்பட்டது என்று இரு நாடுகளும் கூறுகின்றன.

"பாரம்பரிய உரிமைகள் என்ற பதம் இந்திய மீனவர்களுக்கு தீவைச் சுற்றி மீன்பிடிக்கும் உரிமையை அளிப்பதாகப் புரிந்து கொள்ளக்கூடாது" என்று இந்திய அரசாங்கம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

ஆனால், மீன்பிடித்தடைச் சட்டம் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இல்லை என்றும், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரு நாடுகளுக்கு இடையே நடந்த கடிதங்களில் மட்டுமே இருந்ததாகவும் அதனால் அதற்கு கட்டுப்படத் தேவையில்லை என்றும் தமிழக அரசு வாதிடுகிறது.

1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கையின் எல்லைகளுக்குள் வருகின்றபோதும் இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக இப்பகுதியில் அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிப்பதற்கு வசதியாக அவ்வொப்பந்தத்தில் 5 ஆவது மற்றும் 6 ஆவதுமான இரண்டு சரத்துகள் சேர்க்கப்பட்டிருந்தன.

5 ஆவது சரத்தானது இந்திய மீனவர்களும் வழிபாட்டுக்குச் செல்லும்பயணிகளும் கச்சதீவுக்கு, இது நாள் வரை வந்து போனது போல் வந்து போகவும் கச்சதீவை அனுபவிப்பதற்கும் முழு உரிமை உடையவர்கள் ஆவார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'என்னை...

சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருந்தாலும், தாக்குதல்களின் குற்றவாளியாக என்னை காண்பது நியாயமற்றது.

2019 மே 21ஆம்திகதி இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் இடம் பெற்று வருகின்றது.

இருந்தபோதும் தாக்குதல்கள் தொடர்பாக என்னை சிறையில் அடைக்க அல்லது தூக்கிலிடவே கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை விரும்புகின்றார். உரிய விசாரணைகள் முடிவடையாமல் அவர் இதைச் செய்ய முயற்சிக்கிறார்" எனத் தெரிவித்தார். (4-7,9)

## மோ.சைக்கிள்...

தில் கடமையாற்றும் சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த 25 வயதான கோபாலசிங்கம் கஜீபன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே வீதி வளைவொன்றில் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அவருடன் பயணித்த நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இளவாலை பகுதியைச் சேர்ந்த சோபன்ராஜ் என்ற உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,9,30,60)

## கச்சதீவில்...

உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப் பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறும் கேட்டு யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கடந்த மார்ச் 27இல் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும்பேணப்பட குரல்கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என ஆயர் இல்லம் அறிவித்துள்ளது. (4-7,9,30)

## மல்லாவி...

இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - மல்லாவி, வவுனிக் குளத்தில் மூழ்கி குறித்த சகோதரர்கள் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 27 மற்றும் 16 வயதான சகோதரர்களே உயிரிழந்துள்ளனர். சடலங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து மரண வீடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

குளத்தின் பிரதான வாய்க்கால் பகுதிக்குள் இளைய சகோதரர் நீராடிக் கொண்டிருக்கும்போது நீரில் அவர் தத்தளிப்பதைக் கண்டு, மூத்த சகோதரர் அவரை காப்பாற்ற முற்படும் போதே இருவரும் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (4-7,9,33)

## கோட்டா...

ஒழுங்கை உறுதிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாக போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பொருளாதார பாதிப்புக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் இருந்து ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்திகளை புறக்கணித்து சகல பொருட்களையும் இறக்குமதி செய்ததை மறந்துவிடக் கூடாது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத சூழலில் நல்லாட்சி அரசாங்கம் அரசமுறை கடன்களை வரையறையில்லாமல் பெற்றுக் கொண்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எடுத்த் ஒருசில தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பை தீவிரப் படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். வெளிநாட்டு கடன்களை பெறுவ்வது இல்லை என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி அவர் செயற்பட்டார். கோவிட் பெருந்தொற்று தாக்கம் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது.

நாட்டின் பொருளாதார நிலையின் உண்மை தன்மையை கோட்டபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்திருந்தால் யுத்த காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியதை போல பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கியிருப்பார்கள் என மேலும் தெரிவித்தார். (4-7,9)

## சர்வ...

தரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவீர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களாகவே இருக்கும் நிலையிலும், எங்களது நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள நிலையிலும், தமிழ் தேசிய இனம் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சூழலிலும், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவி வழங்கியுள்ளது என்பதைதான் நாம் பார்க்கின்றோம்.

சர்வதேசநாணய நிதிய கடன் இதற்கமைய சர்வதேச நாணய நிதிய நிபந்தனை மூலம் இந்த நாட்டில் இருக்கும் இனப்பிரச்சினை அல்லது அரசியல் பிரச்சினை தொடர்பில் அவர்களால் என்ன செய்ய முடிந்தது? மீண்டும் ஒரு யுத்தத்திற்கு ஐ.எம். எப் நிதி வழங்குகின்றதா? இந்த நாட்டிலே ஒரு இனம் அழிக்கப்பட்டு வருகின்றது.

அந்த இனத்தின் வாழ்க்கை தொலைக்கப்பட்டு வருகின்றது. இந்த சூழலில் சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற கடன் ஊடாக இலங்கை தன்னை கட்டியெழுப்பிக்கொண்டு மீண்டும் ஒரு இனத்தை அழிக்க முற்படும் என்பதை குறிப்பிடுகின்றோம் எனத் தெரவித்தார். (4-7,9)

## பூஜை வழிபாடு...

தாக்கல் செய்திருந்த நிலையில், நீண்ட காலமாக பூஜைகள் இடைநிறுத்தப் பட்டிருந்தது.

மீண்டும் கடந்த 24ஆம் திகதி வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், அடியார்கள் வழிபாட்டுக்கு செல்வது மற்றும் ஆலய வழிபாடுகளை நடத்துவது என்பவற்றிற்கு அரச உத்தியோகஸ்தர்கள் எவரும் தடைவிதிக்க முடியாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. (4-7,9)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப்...

சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வேறு எந்த மாற்றீடும் முன்வைக்கப் படவில்லை என்று கூறிய ஜனாதிபதி, பாராளுமன்றமே அரசாங்கமாக மாறி நெருக்கடியிலிருந்து மீள ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் பாராளு மன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜூலை 2022 இல், இந்த நாட்டில் கலவரங்கள் நடந்தன. தீ வைக்கப்பட்டது. அரசாங்கம் திவாலானது, அதனால் இலங்கை மீதான சர்வதேச நம்பிக்கை முற்றாக இழக்கப்பட்டது.

ஏழு மாதங்களுக்குப் பிறகு, பொருளா தாரத்தை மீண்டும் புரட்டிப் போட்ட இலங்கைக்கு ஒரு வெற்றிக் கதை கிடைத் துள்ளது.

இழந்த இலங்கை மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து மீண்டும் பிறக்கிறது. அதை முன்னெடுத்துச் செல்ல முழு நாட்டினதும் ஆதரவை வேண்டு கிறோம்.

2019 இன் பிற்பகுதியில், வரிகளைக் குறைத்ததன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% இழந்தோம். அதன் பின்னர், கொரோனா தொற்று காரணமாக இலங்கையின் பொருளாதாரம் மேலும் மோசமடைந்தது. இதன் விளைவாக 2022 பெப்ரவரி மூன்று மாதங்களுக்குள் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாயின் மதிப்பு 40% குறைந்துள்ளது.

மேலும், பொருளாதார வளர்ச்சி 2022 முழுவதும் 7.8 சதவீதமாக சுருங்கியது. செப்டம்பர் 2022ல் பணவீக்கம் 70 சதவீதத்தை தாண்டியது மற்றும் உணவு பணவீக்கம் 95 சதவீதமாக உயர்ந்தது.

இந்தப் பின்னணியில், மக்களின் நம்பிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள காலக்கட்டத்தில், நாடு மீள முடியும் என நான் நம்பியதால், ஜூலை மாதம் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன். எதிர்ப்புகளுக்கு மத்தியில் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இல்லாவிட்டால் நாடு முற்றாக அழிந்துவிடும். என் வீட்டு நூலகத்தில் இருந்த ஓவியங்கள் அழிக்கப்பட்டாலும், எரிக்கப்பட்டாலும் நான் தயங்கவில்லை. நாம் அழியாமல் இருக்க உழைத்தோம் எனத் தெரிவித்தார்.(4-7-9)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அட்கு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15351)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15377)


# எரிபொருள் விநியோகத்தில் களமிறங்கும் சினோபெக்

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் அனுமதி பெற்ற மூன்று நிறுவனங்களில் "Sinopec" நிறுவனம் எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்க உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மே மாத நடுப்பகுதியில் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து 45 நாட்களுக்குள் நடவடிக்கைகளைத் தொடங்க முடிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

வணிக உரிமங்கள் மற்றும் ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள், ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் திகதிகள் மற்றும் தொடங்குவதற்கான நேரம் குறித்து நிறுவனத்துடன் கலந்துரையாடியதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (4-7-9)

# பாவனைக்கு உதவாத 1710 சோடா மீட்பு

## வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று யாழ்நகர் கடைகளில் எழுமாறாக பரிசோதனை மேற்கொண்டனர். இதன் போது. காலாவதி திகதி கடந்த சோடாப்போத்தல்களில் காலாவதி திகதியில் மாற்றம் செய்தும் மற்றும் காலாவதி திகதியை அழித்தும் சோடாப்போத்தல்கள் கடைகளிற்கு விநியோகம் செய்யப்பட்டமை பொது சுகாதார பரிசோதகர்களால் கண்டறியப் பட்டது.

இதனைத் தொடர்ந்து விநியோகஸ்தரின் பிறவுன் வீதியில் உள்ள களஞ்சியசாலை யாழ் மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் போது காலாவதி திகதி அழிக்கப்பட்ட நிலையில் 1110 சோடாப்போத்தல்களும் 600 திகதி காலாவதியான சோடாப்போத்தல்களும் என மொத்தம் 1710 சோடாப்போத்தல்கள், கடைகளிற்கு விநியோகம் செய்வதற்கு தயார் நிலையில் இருந்த போது பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டது. குறித்த விநியோகஸ்தரிற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகர்களால்தீர்மானிக்கப்பட்டுள்ளது.(4-7-9-33)


## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி
பேருந்து சேவை
இனிவரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும்
பெயரில் அதே
நிர்வாகத்தின் கீழ்
இயங்கும் என்பதை
அறியத் தருகின்றோம்

077 544 8503 (15337)



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 - தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6437)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6437)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15379)

077 814 7389, 077 986 5457



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம்
மாலை 06 மணிவரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15379)

077 814 7389, 077 986 5457



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15370)

076 755 8606 ,077 638 5683



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை



முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.

076 911 9371, 076 165 3129 (15370)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org